### கோவையில் ‘சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு — 360’ தொடங்கியது:

# நெசவுத் துறை வட்டி மானியத் திட்ட வழிகாட்டுதல்களில் தேவையான மாற்றங்களை தமிழ்நாடு அரசு செய்யும்!

## கோவை மாநாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**கோவை, ஜன.31-**

**கோவை கொடிசியா வளாகத்தில், ‘சர்வதேச ஜவுளி தொழில் மாநாடு - 360, நேற்று முன்தினம் (ஜனவரி 29) தொடங்கி இரண்டு நாள் நடைபெறுகிறது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், ‘‘இந்தியாவுக்கு தமிழ்நாட்டின் நெசவுத் துறை அளிக்கும் பங்களிப்பு, மிகப் பெரியது, நிலையானது. இந்தியாவின் நெசவுத்தொழில் வணிகத்தில், 33 சதவிகித பங்களிப்பை, தமிழ்நாடு வழங்குகிறது. தமிழ்நாடு அரசு 6 சதவிகித வட்டி மானியத் திட்ட வழிகாட்டுதல்களில் தேவையான மாற்றங்களைச் செய்யும். இதனால், நூற்புக்கு முந்தைய மற்றும் நூற்புக்கு பிந்தைய எந்திரங்களுக்கும் இச்சலுகை விரிவாக்கப்படும்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

அனைவருக்கும் காலை வணக்கம்.

இந்தியாவில் முதன்முறையாக நடைபெறும் ‘சர்வதேச நெசவு உச்சி மாநாடு-360’ என்ற இந்நிகழ்வில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு அரசுடன் இணைந்து, இந்தியத் தொழில்துறை சங்கம் (சி.ஐ.ஐ.), தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கம் (சி.மா), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (டி.இ.ஏ.) ஆகிய பல தொழில் துறை அமைப்புகளின் ஒத்துழைப்பால், இந்நிகழ்ச்சி சாத்தியப்பட்டுள்ளது.

**துடிப்புமிக்க நெசவுத் துறை**

‘தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ எனப் போற்றப்படும் கோயம்புத்தூர், தமிழ்நாட்டின் துடிப்புமிக்க நெசவுத் துறையின் புதுமை, தொழில்சார் சிறப்பு, தொழில் முனை உணர்வு ஆகியவற்றை அழகுற பிரதிபலிக்கிறது. இந்த சர்வதேச மாநாடு, தமிழ்நாட்டை ‘இந்தியாவின் நெசவுப் பூங்கா’ என்று அழைக்கப்படும் நிலையை மேலும் உறுதிப்படுத்தும்.

நமது மிகப் பெரிய வலிமை, முழுமையான நெசவு சூழலமைப்புதான். நூலிழையிலிருந்து ஆடை வரை அனைத்தையும் நாம் உருவாக்கித் தருகிறோம். கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கரூர், சேலம், சென்னை ஆகிய மாநகரங்களில் செயல்பட்டு வரும் நமது முக்கிய நெசவு மையங்கள் உலக அளவில் புகழ்பெற்றவைகளாக மாறியுள்ளன.

சமீபகாலமாக மதுரை, திண்டுக்கல், விருதுநகர் ஆகியவை இணைந்து நூற்பு, நெய்தல், செய்முறை, ஆடை உற்பத்தி, மதிப்புக்கூட்டுதல் ஆகியவை நெசவு பொருட்களுக்கான முக்கிய வளர்ச்சிப் பாதைகளாக உருவெடுத்து வருகின்றன. இந்த மையங்கள் தரத்திலும் புதுமையிலும் முன்மாதிரியாகத் திகழ்கின்றன.

**33 சதவிகிதம் பங்களிப்பு**

இந்தியாவுக்கு தமிழ்நாட்டின் நெசவுத் துறை அளிக்கும் பங்களிப்பு, மிகப் பெரியது, நிலையானது. இந்தியாவின் நெசவு வணிகத்தில், 33 சதவிகிதம் பங்களிப்பை தமிழ்நாடு வழங்குகிறது. நூல் உற்பத்தித் திறனில் 46 சதவிகிதம், பஞ்சு துணி நெய்தல் திறனில், 70 சதவிகிதம் நம்மிடம் உள்ளது. மிக முக்கியமாக, தமிழ்நாட்டு நெசவுத் துறை முப்பது லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு வாழ்வாதாரம் அளிக்கிறது. இது இந்தியாவின் மொத்த நெசவு வேலைவாய்ப்பில் சுமார் 28 சதவிகிதம். குறிப்பாக, இந்தியாவின் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களில் 42 சதவிகிதம் தமிழ்நாட்டில் பணியாற்றுகின்றனர்.

இது அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் பெண்கள் மேம்பாடுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது. பல்வேறு சீர்திருத்தங்கள் மற்றும் அரசின் ஆதரவால், தமிழ்நாடு உலக நெசவுச்சந்தையில் வெறும் போட்டியாளராக மட்டுமல்லாமல், மற்றவர்கள் பின்பற்ற வேண்டிய தரங்களை அமைத்துக் கொடுக்கும் நிலையையும் அடைந்துள்ளது.

**ஒரு டிரில்லியன் டாலர்**

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில், தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற கனவை நோக்கி பயணிக்கிறது. இதில் நெசவுத் துறை எப்போதும் முதன்மைத் தூணாகவே இருக்கும். மதிப்புச் சங்கிலியை உயர்த்துதல், புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், உலகளாவிய விரிவாக்கம் ஆகியவற்றால் நமது தொழில்கள் பெரும் வளர்ச்சியை அடைந்து வருகின்றன. செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வணிக மாதிரிகள், அறிவுத்திறன் தானியங்கி முறைகள், அடுத்த தலைமுறை இயந்திரங்கள் வரை - தமிழ்நாட்டு நெசவுத் தொழில் துறை எதிர்காலத்தை நம்பிக்கையுடனும் உலகளாவிய லட்சியத்துடனும் வெற்றிநடை போட்டு வரவேற்க தயாராக உள்ளது.

தமிழ்நாடு அரசு, நெசவுத் தொழிலுக்கு முழு ஆதரவு அளிக்க உறுதி பூண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்நிகழ்வில் ஒரு முக்கிய அறிவிப்பைப் வெளியிடுமாறு எனக்கு அறிவுறுத்தியுள்ளார். மாநிலம் முழுவதிலுமிருந்து நூற்பு ஆலைகள் சார்பில், எழுப்பப்பட்ட கோரிக்கைக்கு இணங்க இந்த அறிவிப்பை இங்கே மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

**சலுகை விரிவாக்கம்**

தமிழ்நாடு அரசு 6 சதவிகித வட்டி மானியத் திட்ட வழிகாட்டுதல்களில் தேவையான மாற்றங்களைச் செய்யும். இதனால், நூற்புக்கு முந்தைய மற்றும் நூற்புக்கு பிந்தைய எந்திரங்களுக்கும் இச்சலுகை விரிவாக்கப்படும். மேலும், தொழிற்சாலைகள் இத்திட்டத்தின் கீழ் மூன்று முறை வரை விண்ணப்பிக்கும் உரிமை பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.புதிதாகத் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த நெசவுக் கொள்கை -2026, போட்டித்திறன், இலகுவான தொழில் செய்யும் சூழல், நிலைத்தன்மை, முதலீடுகள் ஈர்ப்பு ஆகியவற்றில் நமது கவனம் தெளிவாக இருப்பதைக் காண்பிக்கிறது.

**நெசவு வளர்ச்சி**

தமிழ்நாடு அரசு நிலையான கொள்கைச் சூழல், திறமையான பணியாளர்கள், வலுவான உள்கட்டமைப்பு, சிறந்த நிர்வாகம் ஆகியவற்றை வழங்குகிறது. இவை தமிழ்நாட்டை, இந்தியாவில் நெசவு முதலீடுகளுக்கு மிகவும் ஈர்க்கும் இடமாக ஆக்கியுள்ளன. உலகளவிலான நுகர்வோர், தொழில்நுட்ப வழங்குநர்கள், முதலீட்டாள ர்கள் ஆகியோரை , உள்ளடக்கிய நெசவு வளர்ச்சியை ஒருங்கே உருவாக்க, தமிழ்நாட்டுடன் இணைந்து பணியாற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

மீண்டும் ஒருமுறை, இந்த மாபெரும் மாநாட்டை ஏற்பாடு செய்தமைக்கு நெசவுத் துறை மற்றும் இந்தியத் தொழில்துறை சங்கத்திற்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன். சர்வதேச ‘நெசவு உச்சி மாநாடு 360’ அனைத்து வெற்றிகளையும் பெற வாழ்த்துகிறேன். அனைவருக்கும் மிக்க நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.1.2026) கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஜவுளி தொழில் மாநாட்டில் விசைத்தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 12 விசைத்தறியாளர்களுக்கு மானியமாக மொத்தம் 67.49 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி, மாநகராட்சி மேயர் திருமதி. கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் உள்ளனர்.

---

### மாவட்டச் செயலாளர் வி, செந்தில்பாலாஜி தலைமையில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

# தமிழ்நாட்டில் மீண்டும் அமையப்போவது கழக ஆட்சிதான்!

## கரூரில் — கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

கரூர், ஜன.31–

கரூரில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் மாவட்ட கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாட்டில் மீண்டும் அமையப் போவது கழக ஆட்சி தான். மு.க. ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராகிறார். அனைவரும் இதற்கான உறுதிமொழி எடுத்து செயல்பட வேண்டும் என கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் எம்.பி. ஆர். எஸ்.பாரதி பேசினார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கரூர் மாவட்ட கழக மாணவர் அணி, கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கரூர் 80 அடி சாலையில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தலைமை வகித்து பேசினார். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆர்.ஜி. சரவணமூர்த்தி வரவேற்புரையாற்றினார். தலைமைக் கழக பேச்சாளர்கள் டான் அசோக், தி.பிரபு பேசினர். கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை யாற்றினார்.அவர் பேசியதாவது:

மொழிப்போராட்டம் நடைபெறாமல் இருந்திருந்தால் இன்றைக்கு தமிழ்நாட்டில் தமிழே இருந்திருக்காது. இன்றைய மாணவர்கள் இளைய சமுதாயத்தினர் எப்படி இருக்கின்றார்கள் என்பதை பார்க்கிறோம். யாரால் இந்த நிலை என்பதை நான் சொல்ல விரும்பவில்லை.

மராட்டியத்திலே மராட்டி படம் ஓடவில்லை. இந்தி படம் தான் ஓடுகிறது. தமிழ்நாட்டில் கழகம் போராடி இந்தி ஆதிக்கத்தை தடுத்திராவிட்டால், இந்தி படத்தை தவிர வேறு படங்கள் ஓடாது. இளைய சமுதாயத்தினர் சிந்தித்து பார்க்க வேண்டும். தி.மு.க. என்ன செய்தது திராவிட இயக்கம் என்ன செய்தது என்று கேட்கிறார்களே அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கருப்பு சிவப்பு கொடியும், திராவிட முன்னேற்றக் கழகம் தான் காரணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் மட்டும் போராட்டம் நடத்தாமல் இருந்திருந்தால் இங்கேயும் இந்தி படங்கள் தான் ஓடும். 200 கோடி 300 கோடி என்று சம்பளம் வாங்குகிறார்களே. அவர்கள் எல்லாம் இப்படி இந் நிலைக்கு வந்திருக்க மாட்டார்கள். 200 கோடியை விட்டு வந்திருக்கிறேன். 300 கோடியை விட்டு வந்திருக்கிறேன் என்றெல்லாம் கூற முடியாது.



இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் நான் ஈடுபட்டேன். எம்.ஜி.ஆர். அவர்கள் கழகத்தில் இருந்தவரை எம்.ஜி. ஆர். மன்றத்திலிருந்து எம்.ஜி.ஆர். படம் தவிர வேறு படங்களை பார்த்ததே கிடையாது. ஆனால் எம்.ஜி.ஆர். ஒன்றும் செய்யவில்லை. கொடியிலும் கட்சி பெயரிலும் அண்ணா படம் மட்டுமே போட்டார்.

**தி.மு.க.வை அழிக்க முடியாது!**

இந்த இயக்கத்தை எவனாலும் தொட்டுப் பார்க்க முடியாது. தி.மு.க. காரன் ஒரு பிரச்சாரத்தை எடுத்து ஈடுபடுவானேயானால் ஒன்றும் செய்ய முடியாது. இன்றைக்கு ஊடகங்கள் ஒருவரை தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரே ஒருமுறை சி.பி.ஐ. விசாரணைக்கு போய்விட்டு அடங்கிப் போய்விட்டார். இந்த ஆட்சிக்கு எதிராக டெல்லி ஆதரவுடன் வந்துவிட்டு தி.மு.க.வை ஒழித்து விடுவோம் என்கிறார். எவன் வந்தாலும் இந்த கட்சியை தொட்டுக் கூட பார்க்க முடியாது. தி.மு.க.வை அழிப்பேன் என்று சொன்னவர்களுக்கெல்லாம் கல்லறை கட்டிய கட்சி இது.

தி.மு.க. இல்லை என்றால் இந்த நாடு என்ன ஆகி இருக்கும் என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். இரு மொழி கொள்கை இருக்கின்ற காரணத்தினால் தான், நரேந்திர மோடிக்கு சொல்கிறேன் தமிழ்நாட்டில் இந்தியை நுழையவிடா மல் தடுக்கிறோம். இரு மொழி படித்ததினால் தான் இந்த நாடு முன்னேறி இருக்கிறது. மோடிக்கும், அமித்ஷாவுக்கும், கல்வி அமைச்சராக இருப்பவருக்கும் வைராக்கியத்தோடு சொல்லிக் கொள்கிறேன். தமிழையும் ஆங்கிலத்தையும் படித்த காரணத்தினால் தான் உலகத்திலேயே அதிக சம்பளம் வாங்குகிறார் சுந்தர் பிச்சை.

நிலவுக்கு விண்கலத்தை அனுப்பியவர்கள் எல்லாம் அரசு பள்ளியில் படித்தவர்கள் தான். தமிழ்நாட்டில் உள்ள 8 பொறியாளர்கள் தான் இந்தியாவிற்கே பெருமையை தேடிக் கொடுத்திருக்கிறார்கள். அம்பானி ஊரை கொள்ளை அடித்து உலையில்போடுகிறார். அவரது ஒவ்வொரு துறைமுகத்தின் வாயிலாகவும் போதை பொருட்கள் கொண்டு வரப்படுகிறது. ஆனால் இங்கு வந்து போதை பொருள் நடமாட்டம் எனபேசுகிறார்கள்.

**செந்தில்பாலாஜியை தொட்டுக் கூட பார்க்க முடியாது**

கொங்கு மண்டலத்தின் பொறுப்பை ஏற்று தளபதி அவர்களின் தளபதியாக செந்தில் பாலாஜி திகழ்கிறார். ஒரு வருடத்திற்கு மேல் சிறை வைத்து பார்த்தார்கள். ஒன்றும் செய்ய முடியவில்லை. போடப்பட்ட வழக்கு நியாயமானது அல்ல. ஒரு வழக்கு முடித்து வைத்த பிறகு காம்பவுண்ட் ஆன பிறகு அதை மீண்டும் கொண்டு வருகிறார்கள். ஒன்றிய அரசு நீதிபதிகள் மாற்றத்திலே தலையிடுகிறது. .இ.டி போன்ற

எத்தனை அமைப்புகள் வந்தாலும் சரி செந்தில் பாலாஜியை தொட்டுக் கூட பார்க்க முடியாது. தி.மு.க. சட்டத்துறை வலுவாக இருக்கிறது. ஒரு தனி மனிதனைப் பற்றி பிரதமர் பேசுகிறார் உள்துறை அமைச்சர் பேசுகிறார்.

ஸ்டாலினுக்கு நீங்கள் இரண்டு முறை வாய்ப்பு கொடுத்தீர்கள் என மோடி கூறியதில் இருந்தே மீண்டும் கழக ஆட்சிதான் என்பதை ஒப்புக் கொண்டு விட்டார். சுதந்திரம் பெற்றது முதல் இதுவரை செய்யாத திட்டங்களை எல்லாம் கரூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள். அதை யாராவது மறுக்க முடியுமா?.

ஊழலைப் பற்றி மோடி பேசுகிறார் திரும்பிப் பார்த்தால் எடப்பாடி உட்கார்ந்து இருக்கிறார். எடப்பாடி மீது ஊழல் வழக்கு தொடர்ந்தோம். சுப்ரீம் கோர்ட் சென்று தடை வாங்கியவர் தான் எடப்பாடி. அன்புமணி மீது சிபிஐ மருத்துவத் துறை முறைகேடு வழக்கு போட்டது. டிடிவி தினகரன் மீது மோடி அரசு தான் வழக்கு போட்டது. அது மட்டுமல்ல தேர்தல் ஆணையத்துக்கே லஞ்சம் கொடுத்ததாக கைது செய்தார்கள். இவர்களையெல்லாம் மேடையில் வைத்துக் கொண்டு மோடி பேசுகிறார். பெற்ற தந்தையை சித்திரவதை செய்தவரை மேடையில் உட்கார வைக்கலாமா?. இவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு தி.மு.க.வை ஒழித்து விடுவேன் என்கிறார்.

எம்.பி தேர்தலில் மோடி எட்டு முறை வந்தார். 39 என்பது 40 ஆக உயர்ந்து விட்டது. அதையேதான் இப்போதும் பேசிக் கொண்டிருக்கிறார். மோடி அவர்களே உங்களை அன்போடு அழைக்கிறோம். சட்டமன்றத் தேர்தலில் 10 முறை நீங்கள் வர வேண்டும். அமித்ஷா அவர்களையும் 15 முறை அனுப்பி வைக்க வேண்டும். ஒவ்வொருத்தராக மிரட்டி பணிய வைத்து கூட்டணிக்கு கொண்டு வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள இந்த லேடியா அல்லது மோடியா என தைரியமாக ஜெயலலிதா கேட்டார். ஆனால் மேடையில் எடப்பாடியின் கட்சி பெயரைக் கூட குறிப்பிட வில்லை. அந்த கட்சியினர் சிந்திக்க தொடங்கி விட்டனர். அதி.மு.க. ஆட்சி அமையும் என ஒரு வார்த்தை கூட மோடி பேசவில்லை. எடப்பாடி முதல்வர் என்றும் கூறவில்லை.

ஜெயலலிதா ஆட்சியில் போராடிய அரசு ஊழியர்களை இரவோடு இரவாக கைலியோடு, நைட்டியோடு கணவன் மனைவி என கைது செய்து கொண்டு போனார்கள். குழந்தைகள் எல்லாம் வெளியூரில் இருந்து கதறினார்கள். அன்று வழக்கு போட்டு அவர்களுக்கு உதவி செய்தது தி.மு.க.. தான். பிரபல கருத்துக்கணிப்பு நிறுவனம் எடுத்த சர்வேபடி கோவை மாவட்டத்தில் உள்ள ஏழு தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெறும் மூன்று தொகுதிகளில் பாதிக்கு பாதி என குறிப்பிடப்பட்டுள்ளது. அதை முழு வெற்றியாக மாற்றுகின்ற ஆற்றல் செந்தில்பாலாஜிக்கு உண்டு. அதே போல் மேற்கு மண்டலத்தில் இன்றைய நிலவரப்படி 30 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும் என கணித்திருக்கிறது.

அனைத்து தொகுதிகளிலும் இதேபோல பணியாற்றினால் தமிழ்நாட்டில் இருநூறு தொகுதிகளிலும் கழக கூட்டணிதான் வெற்றி பெறும்.

எஸ்ஐஆர். ஐ வைத்து குழப்பம் ஏற்படுத்திவிடலாம் என்று நினைத்தார்கள். அதையும் கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நமது நிர்வாகிகள் முறி யடித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே எஸ் ஐ ஆர் குளறுபடிகளை கண்டுபிடித்தது தி.மு.க. மட்டும் தான். இதுவரை இல்லாத அளவிற்கு கழகத்தினர் பணியாற்றி இருக்கிறார்கள். இன்னும் இருக்கிற 70 நாட்கள் கழகத்தினர் ஆற்றுகின்ற பணி தான் தமிழ்நாட்டில் 70 ஆண்டு காலம் நிலைத்திரக்கும். 2026 தேர்தலில் மீண்டும் அமையப் போகிறது கழக ஆட்சி. தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் இரண்டாவது முறை முதலமைச்சர். இதற்கான உறுதி மொழியை அனைவரும் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

